## இலங்கை மின்சார சபை - 2014

இலங்கை மின்சார சபை (சீஈபீ) மற்றும் சபையினதும் (சீஈபீ) அதன் துணைக் கம்பனிகளினதும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதன மாற்றக் கூற்றுக்கள், காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகல்வல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 1969 இன் 31 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 49(4) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் இலங்கை மின்சார சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன. துணைக் கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் உரிய துணைக் கம்பனிகளின் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனங்களால் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க (எல்கேஏஎஸ்/ஜஎவ்ஆர்எஸ்) தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில் கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம்

உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயங்கள்**

**அ) முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - சபை**

இந்த அறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து இலங்கை மின்சார சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**(ஆ) முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - தொகுதி**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தி மற்றும் 2.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து இலங்கை மின்சார சபையினதும் (சீஈபி) அதன் துணைக் கம்பனிகளினதும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 தொகுதி நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கின்ற போது சபையின் துணைக் கம்பனிகளினது கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அத்தகைய துணைக் கம்பனிகளின் பெயர்களும் உரித்துடைமையும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **துணைக் கம்பனிகளின் பெயர்** | **உரித்துடைமை சதவீதமாக** |
|---|---|
| வரையறுத்த எல்ரீஎல் ஹோல்டிங் (தனியார்) | 63 |
| வரையறுத்த லங்கா கோல் (தனியார்) கம்பனி | 60 |
| வரையறுத்த லங்கா மின்சார (தனியார்) கம்பனி | 52 |
| வரையறுத்த லங்கா எனர்ஜீஸ் (தனியார்) | 100 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வரையறுத்த எல்ரீஎல் கோல்டிங்ஸ் (தனியார்) கம்பனியின் துணைக்கம்பனியான ஹெலடனாவி வரையறுத்த கம்பனியின் தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு மீதான விடயங்கள் அதனது 2014 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட

நிதிக்கூற்றுக்களில் எல்ரீஎல் கோல்டிங்ஸ் (தனியார்) கம்பனியின் கணக்காய்வாளர்களால் வலியுறுத்தப்பட்டிருந்தது.

(ஆ) வரையறுத்த லங்கா கோல் கம்பனியின் (தனியார்) 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 09 மாத காலதாமத்துடன் 2015 திசெம்பர் 28 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வாளர்கள் பின்வரும் விடயங்களை சுட்டிக்காட்டியிருந்தனர்.

(i) ரூபா 502.9 மில்லியன் கூட்டுமொத்த தொகையான வியாபர மற்றும் ஏனைய செலுத்தவேண்டிய மீதிகள் போதிய ஆவணச்சான்றுகள் இல்லாமை காரணமாக கணக்காய்வில் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

(ii) ரூபா 809.7 மில்லியன் பெறுமதியான வியாபார மற்றும் ஏனைய வருமதி மீதிகள் மற்றும் ரூபா 16.9 மில்லியன் தொகையான வரி வருமதிகள் என்பவற்றின் உண்மைத்தன்மை, அறவிடும் தன்மை மற்றும் முழுமைத்தன்மை போன்றவற்றை போதிய ஆவணச்சான்றுகளின்மை காரணமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை. மேலும், ரூபா 152.5 மில்லியன் மேலதிக மதிப்பீடுகள் மீது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் அனுப்பப்பட்ட அந்தரங்க கடிதம் தொடர்பில் கம்பனியால் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததா என்பதை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(iii) 2014 ஜனவரி 01 இல் உள்ளவாறான ரூபா 63 மில்லியன் தொகையான வருமான வரிப்பொறுப்பின் உண்மைத்தன்மையை ஆரம்ப மீதியானது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மீதியுடன் இணங்காமை காரணமாக உறுதிப்படுத்த முடியவில்லை.

**2.3 சபையின்(சீஈபீ) நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.3.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்கேஏஎஸ்/எஸ்எல்எவ்ஆர்எஸ்) மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) **எல்கேஏஎஸ் 01, நிதிக்கூற்றுக்களை முன்வைத்தல் மற்றும் எல்கேஏஎஸ் 16, ஆதனம், பொறி மற்றும் உபகரணம் -** சபையானது அதனுடைய மூலதன மற்றும் பராமரிப்பு வேலைகளை பெறுமதியிடுவதற்காக உண்மையான விகிதங்களை பிரயோகிப்பதற்கு பதிலாக நியம விகிதங்களை பிரயோகித்திருந்தது. இதன் விளைவால், ரூபா 5,923,454,349 தொகையான தேறிய மூலப்பொருள் விலை முரண், ஊழியர் விகித முரண் மற்றும் மேந்தலை முரண்கள் போன்றன மேலே குறிப்பிடப்பட்ட நியமத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளை தீர்மானிப்பதில் கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதற்கு மேலதிகமாக, நிதிக்கூற்றுக்களிலுள்ள பின்வரும் விடயங்கள் உண்மையான விகிதங்களுக்கு பதிலாக நியம விகிதங்களை பிரயோகிப்பதன் மூலம் சபையின் மூலதன மற்றும் பராமரிப்பு வேலைகள் மதிப்பிடுவதால் குறைக்கப்பட்டோ அல்லது அதிகரிக்கப்பட்டோ கூறப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்கு விடயம் | அதிகரித்துக் காட்டப்பட்ட தொகை | குறைத்துக் காட்டப்பட்ட தொகை |
|---|---|---|
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| ஆண்டிற்கான இலாபமும் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான உரிமையாண்மையும் | 561 | - |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 4,324 | 7.2 |

(ஆ) **எல்கேஏஎஸ் 08, கணக்கீட்டுக்கொள்கைகள் கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் வழுக்களிலுள்ள மாற்றங்கள்-** 2011 ஆம் ஆண்டில் ரூபா 9.4 மில்லியனால் அதிகமாக மதிப்பிடப்பட்ட நிலுவையான தொலைத்தொடர்பு செலவினங்கள் நியமங்களில் குறிப்பிடப்பட்டவாறு நிறுத்தி வைத்த உழைப்புக்கு மீள எடுத்து செல்லாமல் மீளாய்வாண்டிற்கான வருமானத்தில் பதியப்பட்டிருந்தது.

(இ) **எல்கேஏஎஸ் 19 ஊழியர் நலன்கள் -** சபையானது பணிக்கொடை நலன்களிற்கான கொடுப்பனவின் மீது தோன்றுகின்ற எதிர்கால கடப்பாடுகளை எதிர்கொள்வதற்காக பணிக்கொடைக்கான ஏற்பாட்டில் முதலிடப்பட வேண்டிய போதிலும் இது தொடர்பில் சபையானது போதிய முதலீடுகளை பேணியிருக்கவில்லை.
இதற்கு மேலதிகமாக 2014 ஆம் ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஓய்வூதிய செலவுகள் தொடர்பிலான நடைமுறை சேவை கிரயம், வட்டிக் கிரயம் மற்றும் முதலீடு மீதான வருமானம் என்பன கணக்காய்வால் செய்யப்பட்ட கணிப்பீட்டின் படி ரூபா 641,107,797 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஈ) **எல்கேஏஎஸ் 20 – அரசாங்க மானியத்திற்கான கணக்கீடு மற்றும் அரசாங்க உதவிகளை வெளிப்படுத்தல்** : கிராமிய மின்மயமாக்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்கலான மின்சாரத்தை பிறப்பித்தல், பரிமாற்றம் செய்தல் மற்றும் விநியோகித்தல் நிகழ்ச்சித்திட்டங்களிற்காக சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு உதவிகள் மற்றும் மூலதன மானியங்கள் என்பவற்றில் சில திறைசேரியினால் மூலதன பங்களிப்பாக கருதப்படாதிருந்த போதிலும் அவை நீண்டகாலமாக பங்களிப்புச் செய்யப்பட்ட மூலதனமாகக் கருதப்பட்டிருந்தன. பொது திறைசேரியால் 2014 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களின் படி, சபைக்கான மொத்த மூலதனப் பங்களிப்பு ரூபா 258 பில்லியன் ஆனதுடன் சபையின் நிதிக்கூற்றுக்களின் படி அது ரூபா 289 பில்லியன் எனக் காட்டப்பட்டிருந்தது. அதற்கமைய, ரூபா 31 பில்லியன் வேறுபாட்டை இணங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) **எல்கேஏஎஸ் 39, நிதிக்கருவிகள், அங்கீகாரம் மற்றும் அளவீடு –** பிராந்தியம் 02 மற்றும் 03 இல் வழங்குநர்களுக்கு செலுத்த வேண்டிய தொகையை கணிப்பிடுவதற்காக நியம விலைகளை பயன்படுத்துவது நியமத்திலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கவில்லை. இதன் விளைவால், சபையின் நடைமுறைப் பொறுப்பு 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 88.2 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், விசேட நிகழ்வுகளிற்கு வெளிச்சம் வழங்கியமை தொடர்பில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சிடமிருந்து பெறவேண்டிய தொகை ரூபா 9,394,437 செலவு மீதியொன்றாக காணப்பட்ட அதேநேரம் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற

தகவல்களின் அடிப்படையில் கணக்காய்வில் கணிக்கப்பட்ட உள்ளபடியான பெறவேண்டிய தொகை ரூபா 1,065,998 ஆகும். ஆகையால், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஏனைய கடன்பட்டோர் ரூபா ரூபா 10,460,435 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) தனிப்பட்ட பிரிவுகளிற்கிடையே பரிமாற்றம் செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் (பிபிஈ) பெறுமதி சபையின் நிதிக்கூற்றுக்களில் பூச்சியமாக இருத்தல் வேண்டும். இருப்பினும் உள்ளே பரிமாற்றம் செய்யப்பட்டவைகள், வெளியே பரிமாற்றம் செய்யப்பட்டவைகள் மற்றும் 2014 ஆம் ஆண்டில் ஏனைய பிரிவுகளிற்கு பரிமாற்றம் செய்யப்பட்ட நடைபெறும் வேலைகள் தொடர்பில் ரூபா 296,060,351 இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. இதன் விளைவால், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் சரியானதன்மை மற்றும் நம்பகத்தன்மை மற்றும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளக பிரிவு நடைமுறைக்கணக்கின் இணக்கக்கூற்றுக்கள் என்பவற்றை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை.

(இ) ரூபா 1,782,778,237 மற்றும் ரூபா 1,093,769,100 தொகையான முறையே மேந்தலை அறவீடுகள் மற்றும் ஊழியர் வீத முரண்கள் போன்றன மீளாய்வாண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சலை தீர்மானிக்கையில் கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. அதனால் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்ட செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ஈட்டிய காசு ரூபா 2,876,547,337 ஆல் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஈ) இருப்பு மெய்மையாய்வில் சேதமடைந்த இருப்பாக இனங்காணப்பட்டிருந்த ரூபா 33.3 மில்லியன் தொகையான இருப்புக்களின் பெறுமதி மெய்மையாய்வில் பிரயோகிக்கப்பட்ட கொள்கைகளின் மாறும்தன்மை காரணமாக கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் சொத்துக்கள் மற்றும் உரிமையாண்மை ஆகிய இரண்டும் அத்தொகையால் அதிகரித்துக் கூறப்பட்டிருந்தன.

(உ) புத்தளம் அனல் மின் நிலையம் கட்டம் II மற்றும் கட்டம் III இன் செயற்பாடுகள் மீளாய்வாண்டின் போது முறையே மார்ச் மற்றும் செப்தெம்பர்களில் செயற்படுத்தப்பட்டிருந்தது. எனினும் அதனால் ஏற்பட்ட ரூபா 115,068.23 மில்லியன் மொத்தக் கிரயம் மூலதனாக்கப்படாமல் நடைமுறை வேலைகளில் இருந்தது.

அவ்வாறே, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 131 மில்லியன் கிரயத்தில் பூர்திதிசெய்யப்பட்ட 178 இலத்திரனியல் வேலைகள் சபையின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களாக கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்காததுடன் அதன் விளைவால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி மற்றும் அதன் மீதான பெறுமானத்தேய்வு என்பவற்றின் பெறுமதி நடைமுறை வேலைகளின் பெறுமதி அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்ட அதேநேரம் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மேலும், உற்பத்தி பிரிவுக்கு சொந்தமான பின்வரும் புனரமைப்பு செயற்திட்டங்கள் மற்றும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட அவற்றின் செயற்பாடுகள் மூலதனமாக்கப்படுவதற்கு பதிலாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறை வேலைகளாக காட்டப்பட்டிருந்தன. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செயற்திட்டத்தின் பெயர் | பெறுமதி ரூபா | முடிவடைந்த திகதி |
|---|---|---|
| விமலசுரேந்திரா மற்றும் புதிய லக்சபான புனரமைப்பு செயற்திட்டம் | 8,217,944,865 | 2014 ஆகஸ்ட் 20 |
| பழைய லக்சபான புனரமைப்பு செயற்திட்டம் | 4,704,222,351 | 2014 ஏப்ரல் 03 |
| | 12,922,167,216 | |

(எ) லக்விஜயா மின் நிலையத்திலுள்ள படகுத்துறை மற்றும் துறைமுகம் போன்றவற்றின் பயன்தரு ஆயுட்காலங்கள் முறையே 100 வருடங்கள் மற்றும் 30 வருடங்களாகவிருந்தது. இருப்பினும், சபையானது இவைகளை தனிப்பட்ட சொத்துக்களாக கருதியிருந்ததுடன் அதற்கிணங்க நிதிக்கூற்றுக்களில் அவற்றின் மீது பெறுமானத்தேய்வுகள் செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே, சபையின் பிரகாரம் மேலே குறிப்பிடப்பட்ட மின் நிலையத்தின் கீழுள்ள மேற்பார்வை கட்டுப்பாட்டு தரவு சுவீகரித்தல் (எஸ்சீஏடிஏ) மற்றும் டிஎவ்ஆர் முறைமைகளின் பொருளாதார பயன்தரு ஆயுட்காலம் 15 வருடங்களாக இருந்தது. எனினும் நிலையத்தின் (அனல்) பொருளாதார பயன்தரு ஆயுட்காலம் 25 வருடங்களாகும்.

மேலேயுள்ள குறைபாடுகளினால் மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு மற்றும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொண்டு செல்லும் பெறுமதி முறையே ரூபா 58,721,367 ஆல் அதிகரித்தும் ரூபா 176,134,102 ஆல் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) லக்விஜயா மின் நிலையத்தின் (எல்விபிஎஸ்) களஞ்சியங்களிலுள்ள உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்களின் பெறுமதி பௌதீக ரீதியில் சரிபார்க்கப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், வெளிநாட்டு நாணயத்தில் நிர்ணயிக்கப்பட்டிருந்த அத்தகைய விடயங்களின் ஒரு பகுதி 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறையில் நிலவுகின்ற விகிதத்திற்கிணங்க ரூபா 115 மில்லியனாக ரூபா பெறுமதிக்கு மாற்றப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஐ) 2013 ஏப்ரல் 20 இலிருந்து செயற்படுத்துகின்ற வகையில் சீஈபீ உடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைக்கு இணங்க நிலுவையாகவுள்ள மீதிகளின் மீது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் வட்டியாக அறவிடப்பட்ட ரூபா 753.6 மில்லியன் தொகை கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக சீபிசீக்கு செலுத்த வேண்டிய ரூபா 1,467,800 மில்லியன் தொகை கணக்குகளிலிருந்து முற்றாக விடுபட்டிருந்தது.

(ஒ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏஈஎஸ் கெலனிரிஸ்ஸா மின் நிலையத்திடமிருந்து மூன்று வருடங்களுக்கு மேலாக அறவிடப்படாமல் இருந்த ரூபா 1,368.9 மில்லியன் தொகையான வருமதி மீதி சீபிசியிடமிருந்து பெறவேண்டியவைகளாக தவறுதலாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஓ) ஆண்டு இறுதியிலுள்ளவாறான சரக்கிருப்பு மீதிகளை சரிபார்த்தல் தொடர்பில் பொதுத்துறையிலுள்ள பட்டயக் கணக்கறிஞர் நிறுவனம் ஒன்றால் சமர்ப்பிக்கப்பட்ட இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம், வாழைச்சேனையிலுள்ள கனரக பராமரிப்பு களஞ்சியங்களில் ரூபா 100.1 மில்லியன் இருப்பு பற்றாக்குறை இருந்ததும் பின்னர் இது மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட இருப்புக்களில் சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்வு அறிக்கையில்

அறிக்கையிடப்பட்ட இருப்பு பற்றாக்குறை பிழையாக இருந்தது என வெளிப்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட இருப்புக்கள் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

**2.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட விநியோக பிராந்தியம் 01,02,03 மற்றும் 04 என்பவற்றின் வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகள் முறையே 1,787.4 மில்லியன், ரூபா 206 மில்லியன், ரூபா 182.7 மில்லியன் மற்றும் ரூபா 23 மில்லியன் 3 வருடங்களுக்கு மேலாக அறவிடப்படாமல் நிலுவையாகவிருந்தது.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாகவுள்ள ரூபா 440.6 மில்லியன் மொத்த வியாபார கடன்பட்டோர் மீதியையும் ரூபா 1,492 மில்லியன் சாதாரண வியாபார கடன்பட்டோர் மீதியையும் அறவிடுவதற்கு சபையானது முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) பரிமாற்ற பிரிவின் கடன்கொடுத்தோர் மீதியானது 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 வருட காலப்பகுதிக்கு மேலாக நிலுவையாக காணப்படுகின்ற இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 7 மில்லியன் மீதிகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும், இந்த தொகையானது 1997 மே 26 இல் சபுகஸ்கந்த ஊடாக செயற்படுகின்ற 132 கிலோவாற்ஸ் பரிமாற்ற வரிசையின் மாற்றத்திற்காக சீபிசீ ஆல் சிஈபிக்கு செலுத்தப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 இலும் அந்த வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் அந்த தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மேற்கு கடற்கரை மின் நிலையத்துக்கு நுழைவாயில் வீதியை கட்டியெழுப்புவதற்காக ரூபா 911.4 மில்லியன் தொகை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மேற்கு கடற்கரை மின் நிலைய திறப்பு விழா மற்றும் நிலைபேறு சக்தி அதிகாரசபையின் (எஸ்ஈஏ) கீழ் சிறிய நீர் மின்சார அபிவிருத்தியாளருக்கு செலுத்தப்பட்ட வரி சீராக்கல்கள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்து வருடங்களுக்கு மேலாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் நிலுவையாக இருந்தது.

(உ) ஐந்து வருடங்களுக்கு மேலதிகமாக எல்ஈசீஓ இடமிருந்து பெறவேண்டிய ரூபா 12.9 மில்லியன் தொடர்பில் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பிராந்தியம் 02 இல் ஐந்து வருடங்களுக்கு மேலாக நிலுவையாகவுள்ள தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டதாக பதிவு செய்யப்பட்ட ரூபா 7.6 மில்லியன் மற்றும் ரூபா 13.6 மில்லியன் இறுதியாக்கப்பட்ட கணக்கு மீதிகளை அறவிடுவதற்கு சபையால் பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அலுவலக (டபிள்யூபிஎஸ் 01) பிரதம பொது முகாமையாளரின் ஏனைய கடன்பட்டோர்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 18.9 மில்லியன் தொகை அவர்களுடைய இயல்புத்தன்மைக்கு மாறாகவிருந்தது.

**2.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊவா மாகாண அலுவலகத்திற்கு உரித்தான ரூபா 38 மில்லியன் பெறுமதியான 12 காணிகளிற்கான காணி உரித்து உறுதிகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை.

(ஆ) சொத்துக்களின் கீழ் உள்ளடக்கப்பட்ட ரூபா 14,238,758 பெறுமதியான 08 மோட்டார் வாகனங்கள் சபையில் பௌதீகரீதியில் இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச் சட்டம்

(i) **47 (1) (ஆ) ஆம் பிரிவு** – இந்தப் பிரிவுகளிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சபையினால் பெறப்பட்ட கடன்களை மீளச் செலுத்துவதற்காக பொதுத் திறைசேரியுடன் ஆழ் நிதியமொன்றை சபையானது தாபித்து பேணலாம். அதற்கமைய கடன் மீட்பொதுக்கமொன்று நிதிக்கூற்றுக்களில் தாபித்து காட்டப்பட்டிருந்தது. ஆனால் அது 2000 ஆம் ஆண்டிலிருந்து நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வொதுக்கக் கணக்கில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட மீதி ரூபா 17,447 மில்லியனாகும்.

(ii) **47 (2) (அ) ஆம் பிரிவு** – சபையின் அசையும் மற்றும் அசையாத ஆதனங்களிற்கான பெறுமானத்தேய்வு தொகையை பாதுகாப்பதற்காக சபை பொதுத் திறைசேரியுடன் பெறுமானத்தேய்வு ஒதுக்கமொன்றை தாபித்து பேணவேண்டிய போதிலும் அத்தேவைப்பாட்டிற்கு முரணாக 2000 திசெம்பர் 31 வரை வருடந்தோறும் ரூபா 1 மில்லியன் தொகையினை மாற்றீடு செய்து அதனது நிதிக்கூற்றுக்களில் பெறுமானத்தேய்வு ஒதுக்கமொன்றை ஏற்படுத்தியிருந்ததுடன் அதன் பின்னர் எவ்வித செயற்பாடும் இடம்பெற்றிருக்கவில்லை. அத்திகதியில் திரண்டிருந்த ரூபா 23 மில்லியன் மீதி வருடாந்த நிதிக்கூற்றுக்களில் எவ்வித மீளாய்வுமின்றி தொடர்ச்சியாக முன்கொண்டு செல்லப்பட்டிருந்தது.

(iii) **47 (2) (ஆ) ஆம் பிரிவு** – சபையின் நிதி ஸ்திரத்தன்மையினை உறுதிசெய்து வருமான பணத்திலிருந்து அதன் மூலதன வேலைகளிற்கு நிதியளிக்கும் நோக்குடனும் சபை காலத்திற்குக் காலம் தீர்மானிக்கும் அவ்வாறான ஏனைய நோக்கத்திற்காகவும் சபை பொதுத் திறைசேரியுடன் பொது ஒதுக்கமொன்றை தாபித்து பேணலாம். இருப்பினும், அத்தேவைப்பாட்டிற்கு முரணாக சபை அதனது நிதிக்கூற்றுக்களில் ஏனைய மூலதன ஒதுக்கமொன்றை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் இது 2000 ஆம் ஆண்டு முதல் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஒதுக்கக் கணக்கில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட மீதி ரூபா 165.45 மில்லியனாகும்.

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட அதிகாரச் சட்டத்தின் 46 ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியின் 11 (அ) மற்றும் (ஆ) பிரிவுகள் என்பவற்றின் ஏற்பாடுகளிற்கு முரணாக 1989 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டு முடிவிலுள்ள அதன் மொத்த நிலையான சொத்துக்களின் மொத்தப் பெறுமதியின் 0.1 சதவீத பங்களிப்பின் அடிப்படையில் காப்புறுதி பாதுகாப்பு நிதியத்தில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,654 மில்லியன் தொகையான அதன் நிதிகளை சபை முதலீடு செய்திருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட சபையினதும் தொகுதியினதும் நிதிக் கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான சபையினதும் தொகுதியினதும் தொழிற்பாடுகள் அதற்கு முன்னைய ஆண்டின் நேரொத்த முறையே ரூபா 22,265 மில்லியன் மற்றும் ரூபா 25,121 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் முறையே ரூபா 12,446 மில்லியன் மற்றும் ரூபா 6,223 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய நட்டத்தை விளைவித்திருந்தது. ஆகையால் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் முறையே ரூபா 34,711 மில்லியன் மற்றும் ரூபா 31,344 மில்லியன் பின்னடைவைக் காட்டுகின்றது.

2014 ஆம் ஆண்டில் நீர்மின் உற்பத்தியானது நீர்த்தேக்கங்களில் காணப்பட்ட குறைந்தளவான நீர் மட்டம் காரணமாக 2013 இல் உற்பத்தி செய்யப்பட்ட 6,906 ஜீடபிள்யூஎச் உடன் ஒப்பிடுகையில் 2,372 ஜீடபிள்யூஎச் இனால் அல்லது 34 சதவீதத்தினால் குறைவடைந்தமை மற்றும் அதன் மூலம் 459 ஜீடபிள்யூஎச் கேள்வி அதிகரிப்பை எதிர்கொள்வதற்கு சுதந்திர மின்சார உற்பத்தியாளர்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட லங்கா கோல் கம்பனி (தனியார்) என்பவற்றிடமிருந்து வெப்ப மற்றும் அனல்மின் உற்பத்தியை கொள்வனவு செய்வதற்கான செலவினம் முறையே ரூபா 37,997 மில்லியன் மற்றும் ரூபா 6,354 மில்லியனால் அதிகரித்திருந்தமை ஆகியன சபையின் நிதிவிளைவுகளில் ஏற்பட்ட இந்த பின்னடைவைக்கு பிரதான காரணங்களாக பங்களித்திருந்தன.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

#### (அ) நிதி நிலைமை

வழங்கப்பட்ட தகவல்களின் படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ளவாறான நிதி நிலைமையின் சுட்டிக்காட்டல்களை பின்வரும் அட்டவணை தருகின்றது.

| **விடயம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | |
|---|---|---|---|
| | **2014** | **2013** | **முரண்** |
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **சதவீதம்** |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 693,166 | 656,000 | 6 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 76,494 | 93,435 | (18) |
| மொத்தச் சொத்துக்கள் | 769,660 | 749,435 | 3 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 82,309 | 92,698 | (11) |
| **தொழிற்பாடு மூலதனம்** | **(5,815)** | **737** | **(889)** |
| ஈடுபடுத்திய மொத்த மூலதனம் | 687,351 | 656,737 | 5 |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | 307,329 | 430,008 | (29) |
| **உரிமைத்துவம்** | **380,022** | **226,729** | **68** |

இதற்கமைய, மொத்தச் சொத்துக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் 3 சதவீதத்தால் அதிகரித்திருந்த அதேநேரம், தேறிய நடைமுறைச் சொத்துக்கள் முன்னைய ஆண்டின் ரூபா 737 மில்லியன் சாதகமான பெறுமதியுடன் ஒப்பிடுகையில் 2014 இல் ரூபா 5,815 மில்லியன் எதிர்மறைப் பெறுமதியாக மாற்றமடைந்து 889 சதவீத குறைவை பிரதிநிதித்துவப்படுத்தியது. இந்த சொத்துக்களின் குறைவிற்கான பிரதான காரணமாக கடன் அறவீட்டுச் செய்முறையிலுள்ள முன்னேற்றம் இல்லாதிருந்ததுடன் ஆரம்ப முற்பணங்களின் அறவீடு காரணமாகவிருந்தது.

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் ரூபா 220 பில்லியன் தொகையான ஈடுபடுத்திய மொத்த மூலதனம் அல்லது முற்பத்து இரண்டு சதவீதம் கடன்களினூடாகப் பெறப்பட்ட நிதிகளால் நிதியிடப்பட்டிருந்த அதேவேளை முன்னைய ஆண்டின் கடன் பங்கு 54 சதவீதமாகும்.

(ஆ) **மொத்த விரிவான இலாப / (நட்ட) பகுப்பாய்வு**

நீர்மின் உற்பத்தி செய்கின்ற சூழ்நிலை இருந்த போதும், மின் கொள்வனவு உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் நிலையான கிரயம் ஏற்படல் தவிர்க்கமுடியாததொன்றாகும். இதன் விளைவால், பொது மக்களுக்கு குறைந்த கிரயத்தில் ஒரு அலகு மின்சாரத்தை வழங்கும் மிக முக்கிய நோக்கத்தை சபை அடைந்திருக்கும் நிலைமையில் இருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டிற்கான ரூபா 16.97 ஆன அலகு கிரயத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அலகு கிரயம் ரூபா 19.97 ரூபாவாக இருந்ததுடன் ரூபா 18.50 இற்கு அலகொன்று விற்கப்பட்டது. இதற்கமைய மீளாய்வாண்டிற்காக கணிக்கப்பட்ட செயற்பாட்டு நட்டம் கீழே தரப்பட்டுள்ளன.

| **வகை** | **இலாபம்/(நட்டம்)** | **இலாபம்/(நட்டம்) இற்கான பங்களிப்பு** |
|---|---|---|
| | **ரூபா மில்லியன்** | **%** |
| உள்நாடு | (16,140) | (111) |
| மதத்தலங்கள் | (809) | (06) |
| பொது நோக்கம் | 17,687 | 122 |
| கைத்தொழில் | (11,295) | (77) |
| அரசாங்கம் | (135) | (1) |
| ஹோட்டல்கள் | 60 | 0 |
| வீதி விளக்குகள் | (2,152) | (15) |
| எல்ஈசீஓ இற்கு விற்பனைகள் | (1,820) | (12) |
| **மொத்த விரிவான நட்டம்** | **(14,604)** | **100** |

இதற்கமைய, பொது நோக்கம் மற்றும் ஹோட்டல் வகைப்படுத்தல்களின் மீதான கட்டணம் சபையின் நட்டத்திற்கு எதிரான அதிகூடிய சாதகமான பங்களிப்பாளராகவிருந்தது. உள்நாட்டு மற்றும் கைத்தொழில் வகைப்படுத்தல்கள் அந்த வகைப்படுத்தல்களில் நிலைத்திருக்கின்ற நட்டங்களுக்கு அதிகூடிய பாதகமான பங்களிப்பாளராக இருந்ததுடன் அவர்களுடைய மொத்தப் பங்களிப்பு 188 சதவீதமாக இருந்தது. எல்ஈசீஓ இற்கான விற்பனை சபையின் நட்டத்திற்கு சாதகமற்ற பங்களிப்பாக காட்டப்பட்டிருந்ததுடன் இது நட்டத்திற்கு 12 சதவீதம் பங்களித்திருந்தது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

(அ) **மின் உற்பத்தி மற்றும் நேர்க் கிரயம்**

முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான மின்வலு உற்பத்தி மற்றும் மின்சார உற்பத்தி மற்றும் மின்வலு கொள்வனவுக்காக ஏற்பட்ட நேரடிக்கிரயங்களின் பகுப்பாய்வினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

**(i) மின்வலு உற்பத்தி**

| மூலம் | மீளாய்வாண்டின் போதான மின்வலு உற்பத்தி | | அதிகரிப்பு / (குறைவு) | |
|---|---|---|---|---|
| | **2014** ஜிடபிள்யூஎச் | **2013** ஜிடபிள்யூஎச் | ஜிடபிள்யூஎச் | சதவீதம் |
| நீர்மின் | 4,534 | 6,906 | (2,372) | (34) |
| அனல்மின் | 4,305 | 3,260 | 1,045 | 32 |
| நிலக்கரி | 3,202 | 1,469 | 1,733 | 118 |
| மாற்றமடையாத புதுப்பிக்கத்தக்க சக்தி | 315 | 263 | 52 | 20 |
| **மொத்தம்** | **12,356** | **11,898** | **458** | **4** |

**(ii) உற்பத்தி மற்றும் மின்வலு கொள்வனவுக்காக ஏற்பட்ட நேரடிக்கிரயம்**

| விடயம் | ஏற்பட்ட நேரடிக்கிரயம் 2014 | | 2013 | |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | சதவீதம் | ரூபா மில்லியன் | சதவீதம் |
| எரிபொருள் | 46,582 | 22 | 29,425 | 18 |
| மின்வலு கொள்வனவு | 101,149 | 48 | 80,308 | 48 |
| நிலக்கரி | 17,031 | 8 | 10,677 | 6 |
| செயற்பாடு மற்றும் பராமரிப்பு | 24,913 | 12 | 26,196 | 16 |
| பெறுமானத்தேய்வு | 21,174 | 10 | 20,319 | 12 |
| **மொத்தம்** | **210,849** | **100** | **166,925** | **100** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 2014 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளிற்கான மொத்த செயற்பாட்டு கிரயத்தில் முறையே 78 சதவீதம் மற்றும் 72 சதவீதம் ஆனவை மின்வலு கொள்வனவு மற்றும் உற்பத்தியுடன் நேரடியாகத் தொடர்புபட்டிருந்தமை வெளிப்பட்டது.

- மீளாய்வாண்டின் போது நேரடிக்கிரயம் 26 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மின்வலு உற்பத்தி 4 சதவீதத்தால் மாத்திரமே அதிகரித்திருந்தது.

**(ஆ) மின்சாரத்தின் அலகுக்கான இலாபம் / (நட்டம்)**

கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒரு அலகு மின்சார விற்பனையிலிருந்தான சராசரி இலாபத்தை / (நட்டத்தை) பின்வரும் அட்டவணை காட்டுகின்றதுடன் கடந்த ஆண்டில் ஏற்பட்ட ஒரு அலகுக்கான இலாபம் ரூபா 2.22 க்கு எதிராக நடப்பாண்டில் ஒரு அலகுக்கான நட்டம் ரூபா 1.47 ஐ பதிவு செய்திருந்தது என வெளிப்பட்டது.

| ஆண்டு | கேடபிள்யூஎச் ஒன்றிற்கான சராசரி விற்பனை விலை | கேடபிள்யூஎச் ஒன்றிற்கான சராசரி கிரயம் | அலகொன்றிற்கான இலாபம் / (நட்டம்) |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| 2014 | 18.50 | 19.97 | (1.47) |
| 2013 | 17.93 | 15.71 | 2.22 |
| 2012 | 15.66 | 21.50 | (5.84) |
| 2011 | 13.22 | 15.59 | (2.37) |
| 2010 | 13.16 | 13.02 | 0.14 |
| 2009 | 13.13 | 14.71 | (1.58) |

### 4.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மைகள்

#### 4.2.1 லக் விஜயா மின்வலு நிலையத்தின் செயற்பாடுகள்

இது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) லக் விஜயா மின்வலு நிலையமானது மறு கட்டளை மட்டம், அதிகூடிய இருப்பு மட்டம், அதிகுறைந்த இருப்பு மட்டம், மறு கட்டளையிடும் அளவு போன்ற நிலக்கரி இருப்பு மட்டங்களை காட்டி இருப்பு பதிவேடுகளை பேணியிருக்கவில்லை. மேலும், நிலக்கரி கையாளுதலுக்காக பராமரிக்கப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளின் சரியானதன்மை மற்றும் நம்பகத் தன்மைகள் போன்றவற்றை பின்வரும் குறைபாடுகளால் உறுதிப்படுத்த முடியவில்லை.

- ❖ நிலக்கரியின் உள்ளெடுப்பு அளவிடல் நம்பகத்தன்மை இல்லாமை
- ❖ நிலையத்திற்கு நிலக்கரியின் உள்ளீட்டு அளவுத்திருத்தம் நம்பகத்தன்மை இல்லாமை
- ❖ வரையறுத்த லங்கா நிலக்கரி கம்பனியோ (தனியார்) அல்லது சீஈபீ யோ கப்பலிலிருந்து இறக்கப்படுவதை மேற்பார்வை செய்யாமை
- ❖ களஞ்சிய காப்பாளர் பொறியியலாளரால் குறிப்பிடப்பட்ட இருப்பு கட்டுப்பாட்டினை விட பதியும் நடவடிக்கையையும் செய்தல்.

(ii) ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களின் போது பயன்படுத்திய நிலக்கரியின் 181,016 எம்ரீ களஞ்சிய பதிவேடினுள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(iii) லக் விஜயா மின்வலு நிலையத்தின் நிலக்கரி முற்றத்தின் தற்போதுள்ள சேமிப்பு இயலளவு 738,720 எம்ரீ ஆகும். சராசரி மாதாந்த நிலக்கரி நுகர்வு 195,000 எம்ரீ ஆக இருப்பதால் களஞ்சிய முற்றம் 3.788 மாதங்களுக்கு தேவையானவற்றை களஞ்சியப்படுத்துவதற்கு மட்டுமே போதுமானது. எனினும், ஒவ்வொரு வருடத்திலும் ஏப்பிரலிலிருந்து செப்தெம்பர் வரையான (6 மாதங்கள்) மழைக்காலத்தில் பாதகமான காலநிலை மற்றும் கடல் நிலைமை காரணமாக நிலக்கரியை இறக்க முடிவதில்லை. ஆகையால் தேவையான மொத்த நிலக்கரியையும் சேமிப்பதற்கு போதுமான களஞ்சிய இயலளவு கிடைக்கப்பெறுவதில்லை.

(iv) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலக்கரி இருப்பானது தனியார் கம்பனியொன்றினால் பௌதீக ரீதியாக சரிபார்க்கப்பட்டிருந்தது. அந்தக் கம்பனியால் வழங்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம், சரிபார்த்தல் குழுவானது ரூபா 375.5 மில்லியன் பெறுமதியான 32,323 மெற்றிக்தொன் நிலக்கரி மிகையாக இருப்பதை கண்டறிந்தார்கள். எனினும், மேலே கூறப்பட்ட மிகையானது நிலக்கரி கையாளுகையில் ஏற்பட்ட குறைபாடுகள் காரணமாக கணக்குகளிற்கு எடுத்து வரப்பட்டிருக்கவில்லை.

(v) கணக்காய்வால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம் மின்சார உற்பத்திக்காக நிலையத்திற்கு வழங்கப்பட்ட நிலக்கரிக்கும் 2014 ஆம் ஆண்டுகளின் போது மின்சார உற்பத்தியில் கொண்டிருக்க வேண்டிய நிலக்கரிக்கும் இடையில் ரூபா 2,144 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 4.2.2 நிலக்கரி கொள்வனவிலுள்ள குறைபாடுகள்

கீழ்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மூன்று தடவை கப்பலில் ஏற்றும் போது பெறப்பட்ட நிலக்கரியின் மொத்த கலோரி பெறுமதியானது (ஜிசீவி) பொறியின் நியம பெறுமதிகளை விட குறைவாக இருந்தது. ஆகையால், ஏற்றும் துறைமுகத்தில் வழங்குனரின் தர பரிசோதகரால் வழங்கப்பட்ட அறிக்கை தவறானதாக இருந்ததுடன் மேலே கூறப்பட்ட பரிசோதகர் இந்தியன் நீதிமன்றத்தால் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தார் என மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 143,932 எம்ரீ குறைந்த ஜிசிவீ நிலக்கரி இருப்பு தீயிலிருந்தும் குறைந்த ஜிவீசி பெறுமதியான நிலக்கரியின் நுகர்வு காரணமாக மாற்றுப் பயன்பாட்டு சக்தி வளங்களிலிருந்து 25 எம்டபிள்யூ வருமான சக்தி பற்றாக்குறையின் நிரப்புகைக்காகவும் சீஈபி ரூபா 345,168,000 நட்டத்தையும் ரூபா 507.6 மில்லியன் மேலதிக கிரயத்தையும் ஏற்படுத்த வேணடியிருந்தது.

(இ) எல்சீசி மற்றும் சிலோன் கப்பல் கூட்டுத்தாபனம் (சீஎஸ்சீ) 6 மாதத்திற்குள் 16 மற்றும் 17 ஆம் இலக்க கப்பலில் சரக்கை ஏற்றல் தொடர்பாக 29,896 எம்ரீ நிலக்கரியை குறுகிய காலத்தில் வழங்குவற்கு இணங்கியிருந்த போதிலும், 2012 ஏப்ரல் 04 ஆம் திகதிய குறுகிய கால விநியோக திகதியிலிருந்து அப்படி செய்வதற்கு அது தவறியிருந்தது. அத்தகைய குறுகிய கால விநியோகத்தின் பெறுமதி ரூபா 654.2 மில்லியன் ஆகும்.

மேலும் சீஈபீ யானது 2014 திசெம்பர் 31 அளவில் அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அந்த மேலதிக கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுத்திருக்காததுடன் மேலதிகபற்று வட்டியை அடிப்படையாக கொண்டு இணைந்த மூலதனத்தின் மதிப்பிடப்பட்ட சந்தர்ப்ப கிரயம் ரூபா 228.9 மில்லியன் ஆகும்.

(ஈ) உண்மையில் நிலக்கரியின் ஜீசிவி ஆனது பொறியின் சிபாரிசு செய்யப்பட்ட பெறுமதியை விட குறைவாக இருக்கிறது. பொறியானது குறை பொறுப்பு காலத்தினுள் இருப்பதால் பொதுமுகாமையாளர் ஒப்பந்தக்காரரையோ அல்லது உற்பத்தியாளர்களையோ பயன்படுத்தி அபிப்பிராயம் பெறவேண்டியிருந்தது. எனினும், உரிய தரப்பினரிடமிருந்து அத்தகை அபிப்பிராயத்தை பெறுவது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2012 திசெம்பர் 21 ஆம் திகதிய சட்டமா அதிபரின் கடிதத்தில் அவரால் அறிவுறுத்தப்பட்டவாறு சீஈபி யானது 2015 யூலை இறுதியிலும் தவறான தீர்மானங்களை அடைவதற்கு பங்குகொண்ட தரப்பினர்களிடமிருந்து நிலைத்திருக்கின்ற நட்டங்களை அறவிடுவதற்கு சபையால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) இரு கேள்வியாளர்களின் விலை சீராக்கங்கள் மீது கொள்வனவு குழுவால் நியமிக்கப்பட்ட கொள்வனவு மேன்முறையீட்டு சபை மற்றும் நியம அமைச்சரவை என்பன பிழையான தீர்மானங்களை மேற்கொள்ளுதலின் விளைவால் நிலக்கரியை

வழங்குவதற்காக பிழையான வழங்குநர் தெரிவுசெய்யப்பட்டார். அதனால் சபை அதற்காக ரூபா 263.5 மில்லியன் மேலதிக கிரயத்தை ஏற்படுத்த வேண்டியிருந்தது.

(ஊ) சீஈபீ க்கும் எல்சீசி க்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நிறையை தீர்மானிப்பதற்கான கிரயம் எல்சீசி கணக்கிற்காக இருக்கும். நிலக்கரியின் நிறையை தீர்மானிப்பதற்காக எல்சீசி தனியார் கம்பனியொன்றை தெரிவுசெய்திருந்ததுடன் அத்தகைய தெரிவானது எல்சீசியால் மேற்கொள்ளப்பட்டதால் அந்த கம்பனியின் பக்கச்சார்பற்ற தன்மை ஐயத்திற்கிடமாகவுள்ளது. எவ்வாறெனினும் நிலக்கரி கையாளுதல் தொடர்பான எல்சீசியின் ஒட்டுமொத்த செலவுகளும் சீஈபீயிடமிருந்து மீளளிக்கப்படும் அதே நேரம் நிறை தீர்மானித்தலிற்கான சான்றிதழ் நேரடி உறுதிப்படுத்தலாக சீஈபீக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(எ) நிலக்கரி இருப்பை அளவிடுவதற்கு சர்வதேச அமைப்பால் பயன்படுத்தப்பட்டுவருகின்ற தந்திரோபாயங்கள் மற்றும் தொழில்நுட்பம் நிலக்கரி இருப்பை நிலக்கரி முற்றத்திலோ அல்லது நகர்த்தலிலோ பௌதீகரீதியாக சரிபார்ப்பதற்கு சீஈபீயால் பின்பற்றப்பட்டோ அல்லது அறிமுகப்படுத்தப்பட்டோ இருக்கவில்லை.

சிலோன் கப்பல் கூட்டுத்தாபனம் மற்றும் ஏற்றல் மற்றும் இறக்கல் துறைமுகங்கள் இரண்டிலுமுள்ள பக்கச்சாார்பற்ற அளவை முகவர் ஆகியோரால் அளவிடப்பட்ட நிறையை ஏற்றுக்கொள்வதன் விளைவால், அளவிடுகளின் சரியானதன்மை மற்றும் வெளிப்படும் தன்மையை கணக்காய்வில் உண்மைத்தன்மையாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மேலும், நிறை அளவிடும் உபகரணம் (நிறை பாலம்) பிழையானதாக இருந்ததெனவும் அவற்றை திருத்துவதற்கோ நிலக்கரி நிறையின் உண்மைதன்மையை அளவிடுவதற்கு மாற்று முறைமையொன்றை எடுப்பதற்கோ சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. ஆகையால், பட்டியலிடப்பட்டதுக்கும் இறக்கப்பட்ட தொகைக்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளிலிருந்தது. ஆகையால், நிலக்கரி இருப்புக்களின் தொகை மற்றும் பெறுமதிகள் இரண்டினதும் சரியானதன்மை சபையின் இருப்பு பதிவேடுகளுக்கு பட்டியலிடப்பட்ட தொகைகளை எடுப்பதால் ஐயத்திற்கிடமாக உள்ளது.

(ஏ) வழமையாக, சீஈபீ யானது நிலக்கரி கொள்வனவுக்காக வழங்கப்படுகின்ற வர்த்தக விலைப்பட்டியலினை அடிப்படையாக கொண்டு எல்சீசிக்கு நாணயக்கடிதத்தின் பெறுமதியை செலுத்துவதுடன் அதிக சந்தர்ப்பங்களில் அதனுடைய பெறுமதியானது உண்மையான விலைப்பட்டியலின் பெறுமதியை விட அதிக பெறுமதியிலுள்ளது. மேலும், எல்சீசி யானது மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகைகளை தீர்ப்பனவு செய்வதற்கு குறிப்பிடத்தக்க நீண்ட காலத்தை எடுக்கிறது. ஒரு சந்தர்ப்பத்திற்காக, நகர்வு இல. 43 மற்றும் 44 இற்காக மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகையை தீர்ப்பனவு செய்வதற்காக முறையே 196 நாட்கள் மற்றும் 171 நாட்கள் எடுத்திருந்தது. ஆண்டொன்றிற்கான 14 சதவீத வங்கி மேலதிகப்பற்று வட்டிவீதத்தின் அடிப்படையில் தீர்க்கப்படாத மேலதிக கொடுப்பனவுக்காக கணிப்பிடப்பட்ட இணைந்த மூலதனத்தின் சந்தர்ப்ப கிரயம் ரூபா 6.7 மில்லியனாகவிருந்தது.

(ஐ) 2014 செப்தெம்பர் 10 இலிருந்து 2015 ஏப்ரல் 29 வரையான காலப்பகுதிக்கு தேவையான மதிப்பிடப்பட்ட நிலக்கரி 2,170,000 எம்ரீ ஆகவிருந்தது. இருந்தபோதிலும், எல்சீசி யானது 1,859,738 எம்ரீயை மாத்திரமே வழங்கியிருந்தது. ஆதலால் நிலக்கரி அளவின் குறைவு 310,262 எம்ரீ ஆக இருந்தது. ஆகையால் மின்வலு நிலையமானது முழு இயலளவில் செயற்பட்டிருக்க முடிந்திருக்காததுடன் அதிகூடிய மின்சாரத்தை உற்பத்தி செய்திருக்கவும் முடிந்திருக்கவில்லை. ஆகையால், 113 இயங்குகின்ற நாட்களுக்கு சமனான 807,974,993 கேடபிள்யூஎச் சபைக்கு நட்டமாக

இருந்ததுடன் லக்விஜயா மின்வலு நிலையத்தினூடாக அனுப்பப்படாததால் அதிகரிக்கின்ற அலகுக்கான கிரயம் 18 ரூபா/ கேடபிள்யூஎச் ஆகும். ஆகையால் மொத்த நட்டம் ரூபா 14,543.5 மில்லியன் ஆகும்.

(ஒ) 2006 சனவரி 25 இன் என்பீஏ சுற்றறிகையின் 4.2 ஆம் வழிகாட்டல் மற்றும் 2006 மார்ச் 24 இன் 128 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், முறையான கொள்வனவுத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் வருடாந்தம் முறையாக அங்கீகாரம் பெறவேண்டியுமிருந்தது. எனினும் அத்தகைய கொள்வனவுத் திட்டம் சபையின் சுமூகமான செயற்பாடுகள் மற்றும் நிதிச் செயற்பாடுகளை உறுதிப்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) லங்கா நிலக்கரி கம்பனியானது பெறப்பட்ட கேள்விகளின் பட்டியல்கள், கேள்வி திறத்தல் தீர்மானங்கள், தொழில்நுட்ப மதிப்பாய்வு அறிக்கைகள், கொள்வனவு குழு அறிக்கைகள் போன்ற விபரங்களை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு தவறியிருந்தது. ரூபா 15,697,500,000 பெறுமதியான நிலக்கரி கொள்வனவுக்கான கேள்வி இல. 03, 04 மற்றும் 05 என்பன தொடர்பில் செயன்முறையின் முறையான செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக சபையின் நிதிக்கூற்றுக்களில் விற்பனைக் கிரயத்தின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது.

### 4.2.3 மின்சார மொத்த வழங்கலுக்கான பிணை வைப்புக்கள்

(அ) கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் பிரகாரம், பிரதிப் பொது முகாமையாளரின் அலுவலகத்திலுள்ள (மேல் மாகாணம் தெற்கு) 123 மின்சார மொத்த வாடிக்கையாளர்களுடன் தொடர்புடைய ரூபா 45.7 மில்லியன் பெறுமதியான பிணைவைப்புக்கள் மொத்த வாடிக்கையாளர்களின் கடன் ஆபத்தை குறைக்கும் வகையில் பெறப்பட்டிருக்கவில்லை என வெளிப்படுத்தப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அத்தகைய வாடிக்கையாளரிடமிருந்து பெறவேண்டிய நிலுவைகளின் மீதி ரூபா 89.1 மில்லியன் ஆகும்.

(ஆ) பிரதிப் பொது முகாமையாளரின் அலுவலகத்திலுள்ள (மேல் மாகாணம் தெற்கு – 1) 568 மொத்த வாடிக்கையாளர்களால் பராமரிக்கப்பட்ட நடைமுறை பிணை வைப்புக்களின் பெறுமதியானது நடைமுறையிலுள்ள கொள்கையின் பிரகாரம் பராமரிக்கப்பட வேண்டிய பெறுமதியை விட ரூபா 848.4 மில்லியனால் குறைவாகவிருந்தது. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அத்தகைய வாடிக்கையாளர்களிடமிருந்து பெறவேண்டிய பிணை வைப்புக்களை விஞ்சிய நிலுவை மீதியானது ரூபா 413.5 மில்லியனாகும்.

(இ) செயற்பாடற்றவையாக (அறவிடமுடியாதவை) ஏற்கனவே அடையாளங்காணப்பட்ட 15 மொத்த வாடிக்கையாளர்களின் கணக்குகளிலிருந்து பெறவேண்டிய ரூபா 3.2 மில்லியன் தொகையானது போதியளவான பிணை வைப்புக்கள் இல்லாமை காரணமாக சபைக்கு நட்டமாக இருப்பதற்கு அதிக சாத்தியத்தன்மையுள்ளது.

### 4.3 முகாமைத்துவ திறமையின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.2 ஆம் பந்தியின் படி அனைத்து பொது முயற்சிகளும் அனைத்து முக்கிய செயறபாடுகளையும் உள்ளடக்கிய தமக்கென உரித்தான முறைமைகள்/கையேடுகளை வைத்திருப்பதுடன் காலத்திற்கேற்ப திருத்தப்பட்டு நாளதுவைரயாக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், 1987 இல் தயாரிக்கப்பட்டிருந்த அதன் செயற்பாட்டு கையேடுகளை சபை மீளாய்வு செய்து நாளதுவரையாக்கியிருக்கவில்லை.

(ஆ) ஐ.அ.டொலர் 6,460 தொகைக்கு சமனான ரூபா 839,800 தொகை சபையால் 2014 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டு பயிற்சிக்கு சென்ற உத்தியோகத்தர்களுக்காக மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் இந்த தொகை 2015 செப்தெம்பர் 14 இலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நான்கு ஆண்டு காலப்பகுதிக்கு மேலாக கிழக்கு மாகாணத்தில் டீஜிஎம் அலுவலகத்திலுள்ள தேசமடைந்த இருப்புக்களாக இனங்காணப்பட்ட ரூபா 8,632,412 பெறுமதியான இருப்புக்களை அகற்றுவதற்கு சபையால் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 125,248,220 பெறுமதியான நூற்று பதினெட்டு இலத்திரனியல் வேலைகள் 05 வருடங்களுக்கு மேலாக செயற்திறனான முறையில் பூர்த்தி செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் நடைமுறை வேலைகளின் கீழிருந்தது.

(உ) சீபீசீ ஆல் வழங்கப்பட்ட ரூபா 9,159,247 பெறுமதியான எரிபொருளின் குறுகிய கால விநியோகம் தொடர்பான விடயம் 2014 திசெம்பர் 31 இலும் தீர்க்கப்படவில்லை.

(ஊ) புத்தளம் ஏரி ஊடாக பரிமாற்றல் வரிசையை இடுவதற்காக நுரைச்சோலையிலுள்ள மீனவர்களின் பிரச்சினையை தீர்ப்பது தொடர்பில் உள்ளுராட்சி சபைகள் மற்றும் பிரதேச செயலகங்களிற்கு முற்பணமாக செலுத்தப்பட்ட ரூபா 103,491,574 தொகை மூலதனமாக்கும் நோக்கத்துடன் கணக்குகளில் நடைமுறை வேலைகளாக காட்டப்பட்டிருந்தது. ஆனால் அத்தகைய செலவுகளின் நியாயத்தன்மை, வெளிப்படுத்தல் தன்மை, மற்றும் பொறுப்பளிக்கும் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்விற்கு சான்றுகளோ மூல ஆவணங்களோ வழங்கப்பட்டிருக்கவில்லை. அதில் அத்தகைய நிறுவனங்களுக்கு கொடுக்கப்பட்ட ரூபா 18,391,574 தொகையானது வங்கி நடைமுறை கணக்குகளில் 06 மாதங்களுக்கு மேலாக வழங்கப்பட்ட நோக்கத்திற்கு பயன்படுத்தாமல் 2015 யூன் 25 இல் உள்ளவாறு பயன்பாடற்றிருந்தது. ஆகையால் அத்தகைய கொடுப்பனவுகளின் உண்மையான தேவைப்பாடு கணக்காய்வில் ஐயத்திற்குரியதாகவுள்ளது.

(எ) 2003 மற்றும் 2009 இல் ஏற்பட்ட சிவில் யுத்தம் காரணமாக சேதமடைந்த சபைக்கு சொந்தமான சொத்துக்களை மாற்றீடு செய்வதற்காக காப்புறுதி ஒதுக்கத்தின் முதலீட்டிலிருந்து ரூபா 1,324.9 மில்லியன் தொகை மீளப்பெறப்பட்டிருந்தது. அத்தகைய சொத்துக்களின் மாற்றீட்டிற்காக ஏற்பட்ட கிரயம் ரூபா 1,261.2 மில்லியனாக இருந்த போதிலும், மேலதிகமாக எடுக்கப்பட்ட ரூபா 63.7 மில்லியன் தொகையை மீள முதலீடு செய்வதற்கு 2014 திசெம்பர் 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும், மாற்றீடு செய்யப்பட்ட சொத்துக்களுக்காக ஏற்பட்ட கிரயத்தில் உள்ளடக்கியிருந்த விலை முரண் உண்மையாக மேலதிகமாக மீளப்பெறப்பட்ட தொகையை மீள முதலீடு செய்யும் நோக்கத்திற்காக தனியாக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நிலக்கரி நகர்வு தொடர்பாக ஜெற்றி செயற்பாடுகளிலுள்ள வினைத்திறனின்மைகளால் மீளாய்வாண்டின் போது சீஈபீயால் மொத்த தாமதக் கட்டணங்களுக்காக ரூபா 27.4 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் வரையறுத்த லங்கா நிலக்கரி கம்பனி (தனியார்) யால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுதலிற்கிணங்க உண்மையாக செலுத்தவேண்டிய தொகையை மதிப்பீடு செய்யாமல் தாமதக் கட்டணங்களுக்காக முற்பணமாக ரூபா 182 மில்லியன் மேலும் செலுத்தப்பட்டிருந்தது. அதேநேரம், கணக்காய்வினால் செய்யப்பட்ட கணிப்பீட்டின் படி அதே காலப்பகுதிக்காக செலுத்தவேண்டிய தொகை ரூபா 47.8 மில்லியன் ஆகும். அவ்வகையான நட்டங்களை குறைப்பதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லையென மேலும் அவதானிக்கப்பட்டது.

**4.4 பயன்பாடற்ற சொத்துக்கள்**

பின்வரும் பயன்பாடற்ற சொத்துக்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) 2009 இல் நிலக்கரியை கையாளும் நோக்கத்திற்காக ரூபா 1,005,333,192 பெறுமதியில் சபையால் கொள்வனவு செய்யப்பட்ட பெரிய அகன்ற படகுகள் மற்றும் இழுவைப் படகுகள் ஐந்து வருடங்களுக்கு மேலாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாடற்றிருந்ததுடன் 2014 இல் இதனை விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் இது தொடர்பில் 2014 திசெம்பர் 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 இல் புத்தளம் நிலக்கரி மின்வலு செயற்திட்டத்தின் கட்டம் I ற்காக பெறப்பட்ட வெளிநாட்டு கடனை பயன்படுத்தி ரூபா 36.5 மில்லியனிற்கு சபையால் கொள்வனவு செய்யப்பட்ட ஐந்து பவுசர்கள் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தாமலிருந்ததுடன் அத் திகதியில் சொத்து பதிவேட்டிற்கு எடுக்காமல் பயன்பாடற்றிருந்தது.

**4.5 முறையற்ற கொடுப்பனவுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 திசெம்பர் 13 இல் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு முரணாக சபையானது 2009 இலிருந்து தாக்கம் செலுத்தும் அடுத்த சம்பள மீளாய்விலிருந்து அதனது ஊழியர்களின் உழைக்கும் போதே செலுத்தும் வரிப்பொறுப்பை ஊழியர்களிற்கு மாற்றுவதற்காக அதனது ஊழியர்களின் சார்பில் உழைக்கும் போதே செலுத்தும் வரியினை செலுத்தியிருந்தது. சபையால் 2010 இலிருந்து 2014 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்டிருந்த உழைக்கும் போதே செலுத்தும் வரி ரூபா 1,407 மில்லியனாகும்.

(ஆ) 1994 யூன் 04 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்டவாறு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது முற்பத்து ஒன்பது வேறுபட்ட பதவியணியினருக்கான படிகள் அவ்வப்போது சபையால் அதன் பதவியினர்களிற்குச் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறான படிகளாக 2013 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 642 மில்லியன் தொகையுடன் ஒப்பிடும் போது 2014 ஆம் ஆண்டில் ரூபா 849 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையில் வெளிப்பட்டது

(இ) சீஈபியின் தலைமை அலுவலகத்திற்காக ''விதுலக்பாய'' எனப் பெயர் சூட்டப்பட்டு பிரேரிக்கப்பட்டிருந்த கட்டிட நிர்மாண நடவடிக்கைகள் பணிப்பாளர் சபையால் 2014 ஒக்தோபர் 07 இல் எடுக்கப்பட்ட தீர்மாணத்தின் பிரகாரம் உடனடியாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், அந்த நிர்மாணத்தின் இடைநிறுத்தலுக்கான காரணங்கள் சபை தீர்மானத்தில் உள்ளடங்கியிருக்காததுடன் கணக்காய்விற்கு கிடைக்கப் பெறவுமில்லை. இடைநிறுத்தப்பட்ட திகதி வரை ஏற்பட்டிருந்த நிர்மாண கிரயங்கள் ரூபா 380 மில்லியனாக காணப்பட்டதுடன் அதற்கு ஏற்பட்ட மொத்தக் கிரயம் கணக்காய்விற்கு கிடைகைப்பெற்றிருக்கவில்லை.

**4.6 இனங்காணப்படாத நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) லக் விஜயா மின்வலு நிலையத்திற்கு சொத்தமான இரண்டு இழுவைப் படகுகள், மூன்று பெரிய அகன்ற படகுகள் மற்றும் ஒரு வரிசை படகு நிலக்கரி இறக்குதல் செயற்பாடுகளுக்கு பொருத்தமற்றிருப்பதால் திருகோணமலை மற்றும் கொழும்பு துறைமுகங்களில் 2009 இலிருந்து நிறுத்தப்பட்டிருந்தது. எனினும், நிலக்கரி மின்வலு

செயற்திட்டத்திற்காக பெறப்பட்ட வெளிநாட்டு கடனிலிருந்து செயற்திட்ட பணிப்பாளர் மற்றும் சீஈபீ பிரதிநிதியின் சிபாரிசு மற்றும் வரிசை அமைச்சின் மேற்பார்வையின் கீழ் அந்த சரக்குகளை ஏற்றியிறக்கும் படகு உபகரணம் சீஈபீயால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அந்த அலுவலகங்களின் பிழையான தீர்மானங்கள் காரணமாக சீஈபீ யானது ரூபா 1,250.1 மில்லியன் தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **விபரம்** | **தொகை** |
|---|---|
| | **ரூபா** |
| கொள்வனவு கிரயம் | 1,074,244,082 |
| சரக்கு ஏற்றியிறக்கும் படகு உபகரணத்துடன் (பராமரிப்பு) தொடர்புடைய செலவினம் | 55,600,510 |
| நங்கூரமிடுவதற்காக சிலோன் கப்பல் கூட்டுத்தாபனத்திற்கு மீளளிக்கப்பட்ட செலவினங்கள் | 120,265,270 |
| மொத்தம் | 1,250,109,862 |

(ஆ) சபையின் களஞ்சியத்தில் வேலைக்கமர்த்தப்பட்ட தனியார் பாதுகாப்பு நிறுவனத்தின் பாதுகாவலரால் திருடப்பட்ட நீர் பம்பி உட்பட சபைக்கு சொந்தமான வாழைச்சேனையிலுள்ள கனரக பராமரிப்பு களஞ்சியங்களின் தவறவிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,610,203 ஆகும்.

(இ) இழிவான தரத்தினால் தர பரிசோதகர்களால் நிராகிக்கப்பட்ட கிராமிய மின்னூட்டல் செயற்திட்டத்திற்கான ஈரானிய கடனின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட மின்காப்புப்பொருட்களின் பெறுமதி ரூபா 6,387,630 ஆகும். அத்தகைய தவறான கொள்வனவுக்காக கொடுகொடவிலுள்ள களஞ்சியத்திற்கு அவற்றை மாற்றுவதற்கு மட்டுமே சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2014 ஆம் ஆண்டின் பௌதீக மெய்மையாய்வில் இனங்காணப்பட்ட ரூபா 85,670,920 பெறுமதியான டீசல் பற்றாக்குறைக்கான காரணங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. மேலும் அத்தகைய பற்றாக்குறை புலனாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.7 சர்ச்சைக்குரிய விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகள் உள்ளடங்கலாக அனைத்து பொதுத்துறை நிறுவனங்களில் நிதி மற்றும் நிருவாகம் தொடர்பாக ஒரே சீரான நடைமுறைகள் மற்றும் செயற்பாடுகளைப் பேணுவதற்காக காலத்திற்குக்காலம் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட திறைசேரி சுற்றுநிருபங்கள் மற்றும் பொது நிருவாக சுற்றுநிருபங்கள் என்பவற்றை இலங்கை மின்சார சபையின் பணிப்பாளர் சபை இலங்கை மின்சாரசபைக்கான நிருவாக ஒழுங்குவிதிகளாக கடைப்பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிராததால் அவை பிரயோகிக்கப்படுவதில்லை என்ற நிலையை 1969 இன் 31 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்ததப்பட்ட 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சாரசபை அதிகாரச்சட்டத்திற்கு இணங்க சபை பேணியிருந்ததென்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

(i) 1990 மார்ச் 09 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றுக்கு முரணாக பத்திரிகை விளம்பரங்கள், வர்த்தகமானி அறிவித்தல்கள் போன்ற சுற்றுநிருப

அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்டவை ஊடாக தகைமைகொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து நாடளாவிய ரீதியில் விண்ணப்பங்களைக் கோராது எழுதுவினைஞர்கள், காசாளர்கள், களஞ்சியக் காப்பாளர்கள், தட்டெழுத்தாளர்கள், சாரதிகள், அலுவலக உதவியாளர்கள், தொழிலாளர்கள் போன்ற திறன்கள் அற்ற மற்றும் பகுதியளவில் திறன்கள் கொண்ட பதவியணியினரை சபை வருடாந்தம் ஆட்சேர்ப்புச் செய்திருந்தது. மீளாய்வாண்டின் போது அந்த முறையில் 333 ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். அதன் விளைவாக மிகப் பொருத்தமான நபர்களை தொடர்புடைய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான சந்தர்ப்பத்தை சபை இழந்திருந்தது.

(ii) 1998 மார்ச் 08 ஆந் திகதிய 130 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 10 சதவீதம் முதல் 14 சதவீதம் வரை வாகனக் கடன்களை வழங்குவதற்குப் பதிலாக சபை 4.2 சதவீத வட்டியில் கடன்களை வழங்கியிருந்தது. மேலும், சபை பல பண பிரச்சனைகளை சந்திக்கின்ற போதிலும் கட்டுப்பாடுகள் எதுவுமின்றி பதவியணியினர்களுக்கு கடன்களை வழங்குகின்றதென வெளிப்பட்டது.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காப்புறுதி ஒதுக்க நிதிய மீதி மற்றும் காப்புறுதி ஒதுக்க நிதிய முதலீடு என்பவற்றுக்கிடையில் ரூபா 4,099 மில்லியன் தொகையான குறைவு அவதானிக்கப்பட்டதுடன் சபையின் சுய காப்புறுதிக் கொள்கையின் படி முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறான நியதிச்சட்டத் தேவைப்பாடுகளை அமுலாக்குவதற்கு சபையில் பொருத்தமான நிதி முகாமைத்துவம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) எல்ஈசீஓ இற்கு பல ஆண்டுகளாக சபை மின்சாரத்தை விற்பனை செய்தும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து எரிபொருளைக் கொள்வனவு செய்துமிருந்த போதிலும், தனிப்பட்ட நிறுவனங்களின் சுமூகமான செயற்பாடுகளை உறுதிப்படுவதற்கு அந்த இரு தரப்பினர்களுடன் விற்பனை மற்றும் கொள்வனவு உடன்படிக்கைகள் எதுவும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டுகளிற்கான எனது அறிக்கையின் மூலம் அறிக்கையிடப்பட்ட பின்வரும் விடயங்கள் தொடர்பில் 2014 ஆம் ஆண்டிலேனும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- ஒத்த அலகுகளைக் கொண்டு முன்பக்க கெப் வண்டி பதிலீடு செய்யப்பட்டது. (24 வாகனங்கள்)
- உள்நாட்டில் பாவிக்கப்பட்ட ஏ 2ரீ பாரந்தூக்கி பொருத்தப்பட்டது (2 வாகனங்கள்)
- பாவிக்கப்பட்ட கெப் வண்டியை கொண்டு அசல் கெப் வண்டி பதிலீடு செய்யப்பட்டது. (2 வாகனங்கள்)
- பயன்படுத்தப்பட்ட வேறுபட்ட ரக கெப் வண்டி மற்றும் தட்டினைக் கொண்டு அசல் முன்பக்க கெப் வண்டி மற்றும் பின்பக்கத் தட்டு பதிலீடு செய்யப்பட்டது. (1 வாகனம்)
- பயன்படுத்தப்பட்ட அலகுகளைக் கொண்டு முன்பக்க கெப் வண்டி மற்றும் பின்பக்கத் தட்டு பதிலீடு செய்யப்பட்டது. (1 வாகனம்)
- உள்நாட்டில் ஒரு பாரந்தூக்கி பொருத்தப்பட்டது (1 வாகனம்)

மேலும், சீஈபீக்கு சொந்தமான மற்றும் வாடகைக்கமர்த்தப்பட்ட வாகனங்களுக்காக முறையான நாளதுவரையாக்கப்பட்ட வாகன தரவுத்தளங்கள் இருக்கவில்லை. ஆகையால், 2014 இல் வாகன பராமரிப்புக்காக ஏற்பட்டிருந்த ரூபா 216,773,402 இற்கான நியாயத்தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(உ) வரையறுக்கப்பட்ட திருகோணமலை மின்வலு கம்பனி, கூட்டு முயற்சி கம்பனியில் 50 சதவீத உரிமைத்துவம் சீஈபீ இற்கு காணப்பட்ட போதிலும், மூன்று பணிப்பாளர் பதவிகளில் ஒரு பதவி மாத்திரம் அதற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. ஆகையால், ஏனைய பங்காளர்களிற்குச் சாதகமாக தீர்மானங்கள் எடுக்கப்படுவதற்கான சாத்தியம் அதிகளவில் காணப்படுகின்றது.

## 4.8 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் ஆட்சேர்ப்புத் திட்டம் (எஸ்ஓஆர்) நீண்டகாலமாக நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டிற்கான சபையின் பிந்திய அங்கீகரிக்கப்பட்ட ஆளணித் திட்டத்தினை மிகைத்து 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3655 ஊழியர்கள் வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தனர். வெளியிலிருந்து பெறப்பட்ட ஊழியர்கள் சபையின் மொத்த பதவியணியினர் பலத்தில் 20 சதவீதமாக இருந்தது.

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் பதவியணியிலுள்ள பின்வரும் பதவிகள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடமாக இருந்தன. அத்தகைய பதவிகளில் அதிகமானவை ஒப்பந்த மற்றும் வெளிவாரி அடிப்படையில் நிரப்பப்பட்டிருந்தன.

| **வகை** | **வெற்றிடமான பதவிகளின் எண்ணிக்கை** | **ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட்டவை/ மனித வலு** |
|---|---|---|
| நிறைவேற்றுனர் | 367 | 09 |
| மத்திய மட்ட தொழில்நுட்பச் சேவை | 164 | 29 |
| எழுதுநர் மற்றும் இணைந்த வகைகள் | 509 | 1174 |
| அலுவலக ஊழியர் வகைகள் | 47 | 179 |
| சாரதிகள் | 28 | 535 |
| திறன் தொழில்நுட்பச் சேவை | 647 | 805 |
| அரை- திறன் தொழில்நுட்பச் சேவை | 1,690 | 213 |
| ஏனைய திறன் பதவியணி | 34 | 8 |
| **மொத்தம்** | **3,486** | **2,952** |

(ஈ) திறன்களற்ற வெளிக்களச் சேவைக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1,356 ஆல் மிகையாக காணப்பட்டது.

(உ) பதவியுர்வுக்காக சிரேஷ்ட அடிப்படையினை மாத்திரம் கருத்திற்கொள்வதனைத் தவிர வெற்றிகரமான திட்டமொன்று காணப்படவில்லை. சபை வழமையாக பிரதான பதவிகளுக்கு அரையாண்டிலும் பார்க்க குறைவான காலத்திற்கு பதவியுயர்வுகளை வழங்கியிருந்தது சரியில்லாத நடைமுறையாக வெளிப்பட்டது. ஆகையால் பதவியுயர்த்தப்படுவதனால் ஊழியர்கள் நன்மை அடைந்தனரேயன்றி நிறுவனமல்ல என அவதானிக்கப்பட்டது.

(ஊ) மனித வளப் பிரிவிலுள்ள பிரதான பதவி பிரதிப் பொது முகாமையாளர் (ஆளணி) ஆகும். ஆனால், விசேடமாக மின்னியல் பொறியியலாளர் போன்ற ஏனைய சேவையிலுள்ளோருக்கும் இப் பதவியினை பெற்றுக்கொள்வதற்கு இயலுமான முறையில் தேவையான மனித வளத் தகைமைகள் மற்றும் அனுபவங்கள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறித்துரைக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் தற்போதுள்ள ஆட்சேர்ப்புத் திட்டம் முழுமையானதும் சரியானதுமான ஒன்று எனக் கருதப்பட முடியவில்லை.

(எ) சபையில் ஆளணி முகாமைத்துவப் பிரிவிலுள்ள பிரதான பொறியியலாளர் என்ற பதவி (மனிதவள கொள்கை) தனித்தனியான இரண்டு உயர்திறன் தொழிலாளர்களுக்கிடையே பொருத்தமில்லாமையை வெளிப்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டிருந்தது.

(ஏ) தற்போதுள்ள ஆட்சேர்ப்புத் திட்டத்தின் படி, மனித வள உத்தியோகத்தர் சேவையின் மொத்தப் பதவியணியில் 50 சதவீதமானவை வெளியிலிருந்து நிரப்பப்படுவதுடன் அதனை ஒவ்வொரு ஆண்டிலும் படிப்படியாக அதிகரித்து 85 சதவீதம் வரை உயர்த்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சபையின் சரித்திரத்தில் இரண்டு பொறியிலாளர்கள் பிரிவுகளின் தொழிற்பாடுகளிற்கு நீண்ட காலமாக தலைமைதாங்கி செயற்பட்டு வருவதனால் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் அவ்வாறு வெளிவாரியாக ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களிற்கு தெளிவான பதிவியுயர்த்தல் பாதையொன்று இருப்பது அவதானிக்கப்படாததுடன் அப்பிரிவிலுள்ள 4 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட பதவிகள் மனிதவளத் துறையிலல்லாத ஏனைய சேவைகளிற்கு திறந்து விடப்பட்டிருந்தது.

(ஐ) மனித வள முகாமையாளர் மற்றும் மனித வள உத்தியோகத்தர் போன்ற பதவிகளிற்கு நேரடி ஆட்சேர்ப்பிற்குத் தேவையான அனுபவம் 100 ஊழியர்களிற்கு மேற்பட்ட நிறுவனமொன்றில் மனிதவளத் துறையில் 06 ஆண்டுகளாக உள்ள போதிலும் இந்த நிறுவனத்தில் கையாளப்பட வேண்டிய பதவியணிப் பலத்துடன் ஒப்பிடுகையில் அது போதுமானதல்ல.

## 5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு மற்றும் உண்மையானவற்றுக்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு ஆக்கபூர்வமான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

## 6 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஆ) பெறவேண்டியவைகள் மற்றும் செலுத்தவேண்டியவைகள்
(இ) இருப்புக் கட்டுப்பாடு மற்றும் இருப்பு முகாமைத்துவம்
(ஈ) மனித வள முகாமைத்துவம்
(உ) கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவம்
(ஊ) முதலீடுகள் மற்றும் துணைக் கம்பனிகள் மீதான கட்டுப்பாடு
(எ) செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு
(ஏ) பாதீடு
(ஐ) பதவியணியினர் கடன்கள்
(ஒ) மின்சார கொள்வனவு முகாமைத்துவம்.